1981 ஆகஸ்ட் 29]

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவர் அவர்களே, வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சிறு விவசாயிகளுக்கும் மிகச் சிறிய விவசாயிகளுக்கும் மானிய விலையில் விதைகள் வழங்கப் படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதே போல பெரிய விவசாயிகளுக்கும் தேவைப்படுகின்ற விதைகள், மானிய விலையில் இல்லாவிட்டாலும், முழு விலையில் வழங்க அரசு முன்வருமா? மாவட்ட ரீதியாக எவ்வளவு விதைகள் இப்படி மலிவு விலையில் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, சிறு விவசாயிகளுக்கும் குறு விவசாயிகளுக்கும் தந்ததுபோக அதிகம் இருந்தால் இப்படிப்பட்ட விதைகளை தர இயலும். மாவட்ட வாரியாக விவரம் தற்போது இல்லை.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சிப் பகுதிகளிலே விவசாயிகளுக்கு, சிறு விவசாயிகளுக்கு சில உதவி செய்கிற வகையில் மணிலா விதைகள் போன்ற விதைகளை மானிய விலையில் அளிக்கும் உத்தரவை அரசு தக்க தருணத்திலே உத்தரவிடாத காரணத்தினால், அந்தக் காலதாமதத்தாலே உத்தரவு கிடைக்காத காரணத்தினாலே ஆரம்பத்திலே முழு விலை கொடுத்து விவசாயி வாங்கியவர்களுக்கு பிறகு அந்த மானியம் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இதுபற்றி இதுவரையில் எந்தப் புகாரும் அரசுக்கு வரவில்லை. விவரம் தெரிவித்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

பிள்ளையார் நத்தம் கிராமம் அருகே பழப்பண்ணை ஏற்படுத்தும் திட்டம்.

*வினா எண் 130—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவில்லிப்புத்தூர் தொகுதி பிள்ளையார்நத்தம் கிராமம் அருகே 100 ஏக்கரில் மேற்குத் தொடர்ச்சி மலை முன்னேற்ற திட்டத்தின் கீழ் மாபெரும் பழப்பண்ணை ஆரம்பிக்கும் செயற் குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : திருவில்லிபுத்தூர் தாலூக்கா மேற்குத்தொடர்ச்சி மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சேர்க்கப்படவில்லை. எனினும் திருவில்லிப்புத்தூர் தாலூக்காவிலுள்ள வெங்கடேசபுரம் என்னும் கிராமத்தில் 20 ஏக்கர் பரப்பளவு நிலத்தில் பழப்பண்ணை மற்றும் நாற்றங்கால் நிறுவும் செயற்குறிப்பு ஒன்று உள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, திருவில்லிபுத்தூர் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றியதற்கு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்

கொள்கிறேன். ஆண்டாள் கோவிலில் தங்களுக்காக விசேஷ மரியாதை செய்கிறேன் என்று கூறிக்கொண்டு, இந்தப் பழப் பண்ணை எவ்வளவு ரூபாயில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. எப்போது முதல் இது செயலுக்கு வரும்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, $3\frac{1}{2}$ லட்சம் ரூபாயில் பழப்பண்ணை செயல்பட இருக்கிறது. ஆணை யிடப்பட்டிருக்கிறது, வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. விசேஷ மரியாதை செய்வதற்கு நன்றி.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, இந்தப் பழப் பண்ணை வரக்கூடாது என்று விஷமிகள் சிலர் அந்த இடத்தில் 7 லட்சம் ரூபாய் செலவில் கண்மாய் அமைக்க திட்டமிட்டிருக் கிறார்கள் என்பது உண்மையா? அந்த பைல் ரெவின்யு இலாகா வில் உருவாகி இருப்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அதைத் தடுத்து நிறுத்துவதற்கு அரசு முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, தாமரைக்கனியின் துணை இருக்கும்போது விஷமிகளை முறியடிப் பது எளிதான காரியம்.

மதுரை—தேனி-குமுளி சாலையினை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றும் திட்டம்.

*** வினா எண் 131—திரு. வே. இரா. ஜெயராமன்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா —

மதுரை-தேனி-குமுளி சாலையினை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றுவது குறித்து மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யும் உத்தேசம் ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மதுரை-தேனி-குமுளி சாலையினை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றுவது குறித்து மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்படவில்லை. தொண்டி—மதுரை—கொச்சி சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்று வதற்கு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இச்சாலையில் வினாவில் குறிப்பிட்டுள்ள ஒரு பகுதி சாலையான மதுரை-தேனீசாலை அடங்கும்.

திரு. வே. இரா. ஜெயராமன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மதுரையிலே இருந்து தேனி வரை செல்லுகின்ற 47 மைல் தூரத்தை மத்திய அரசுக்கு பரிந்துரை செய்திருப்பதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் திண்டுக்கல் தேனியை இணைத்து குமுளி வரை பாதை அமைத்தால் கூடலூர் –திருவனந்தபுரம் புதிய தேசிய நெடுஞ்சாலை ஏற்படுவதற்கு வாய்ப்பாக இருக்கும். அந்தப் பகுதியிலே தொழில் வளம் பெருக வும் ஏதுவாக இருக்கும் என்ற காரணத்தால் அதையும் இந்த அரசு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.